*MJSSH Online: Volume 3- Issue 4 (October, 2019), Pages 379 – 397* *e-ISSN: 2590-3691*

ORIGINAL ARTICLE

# இலங்கை கிழக்கு மாகாண தமிழ்மொழிப் பாடசாலைகளில் பாட வகுதி குறிப்பிடப்படாது பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

## [ILANGKAI KILAKKU MAAKAANA TAMILMOZIP PAADASALAIKALIL PAADA VAKUTI KURIPPIDAPPADAATHU PADDATAARI AASIRIYAR NIYAMANAM VAZANGKAPPADDA PADDATAARI AASIRIYARKAL ETHIRKOLLUM PIRACCANAIKAL]

## PROBLEMS FACED BY GRADUATE TEACHERS WHO RECRUITED WITHOUT INDICATING THEIR SUBJECT CATEGORY IN THE TAMIL MEDIUM SCHOOLS IN EASTERN PROVINCE OF SRI LANKA

**முகமட் உசனார் முகமட் ஸபீர்[1] / Mohamed Ussanar Mohamed Safeer[1]**
**பரீட் முகமட் நவாஸ்தீன்[2] / Fareed Mohamed Nawastheen[2]**

[1] ஆசிரியர், மட் /மம/கேணிநகர் மதீனா வித்தியாலயம், வாகனேரி, இலங்கை / Teacher, BT/BC/Kernynagar Madeena Vidyalaya, Vahaneri, Sri Lanka.
மின்னஞ்சல் / Email: safeerhafis@gmail.com
[2] சிரேஸ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை / Senior Lecturer, Faculty of Education, The Open University of Sri Lanka.
மின்னஞ்சல் / Email: fmnaw@ou.ac.lk

DOI: https://doi.org/10.33306/mjssh/42

**ஆய்வுச் சாரம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழிப் பாடசாலைகளில் பாட வகுதி குறிப்பிடப்படாது பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிவதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கோறளைப்பற்று மேற்கு

கோட்டத்தில் கற்பிக்கும் இவ்வகை நியமனம் பெற்ற ஆசிரியர்களுள் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் 8 ஆண் ஆசிரியர்களும் 5 பெண் ஆசிரியைகளுமாக 13 ஆசிரியர்கள் இவ் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். அரை கட்டமைக்கப்பட்ட நேர்காணல் (Semi structured interview) மூலம் சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் சார் பகுப்பாய்வு நுட்பமுறை மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நிருவாக ரீதியாக, மனவெழுச்சி ரீதியாக மற்றும் கற்பித்தல் ரீதியாகப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என இவ்வாய்வின் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்துகின்றன. பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்போது, பாட வகுதி கண்டிப்பாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்றும், பாட வகுதி குறிப்பிடப்படாமல், பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு, அவர்களுக்கான பாட வகுதி குறிப்பிடப்பட்டு, நியமனக் கடிதம் வழங்கப்பட வேண்டும் என்றும், இவ் ஆசிரியர்களது தொழில் திருப்திக்கான சாத்தியப்பாடுகள் இனங்காணப்பட்டு அவை துரிதமாகவும் முறையாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் இவ் ஆய்வு பரிந்துரை செய்கின்றது.

**கருச்சொற்கள்** : பாட வகுதி, பட்டதாரி ஆசிரியர் நியமனம், ஆசிரியர்களின் தொழில் திருப்தி, இலங்கை கிழக்கு மாகாணம்

## Abstract

The study aimed at identifying the problems faced by Graduate Teachers who recruited without indicating their subject category in the Tamil medium schools in Eastern Province of Sri Lanka. Using a simple random sampling technique, a total number of 13 teachers which consisted of 8 male teachers and 5 female teachers from the population of graduate teachers in the *educational division of Koralai Pattu West* in eastern province in Sri Lanka, was selected for the study. The study was employed qualitative approach and a semi structured interview schedule was used to collect data. Collected data was analyzed using a thematic technique. Based on the analysis of the data, it was found that many teachers were not satisfied with their teaching and faced problems in terms of administrative, emotional and teaching subjects in the schools. Therefore, it was recommended to recruit graduate teachers with mentioning their teaching subject category in order to make them satisfaction in their teaching.

**Keywords**: Subject category, Recruitment of graduate teachers, Job satisfaction, Eastern Province of Sri Lanka

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 10th August 2019, revised 10th September 2019, accepted 20th September 2019

**முன்னுரை**

மாணவர்கள் பெறும் பாடசாலைக் கல்வியில் ஆசிரியர்களின் வகிபாகம் முதன்மையானது. அதனால், பிரச்சினைகளற்ற சுமுகமான சூழலில் கற்பித்தல் பணிகளை மேற்கொள்ள அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் கல்விச் செயன்முறையைப் பாதிக்கக் கூடிய மிகவும் தீவிரமான காரணிகளாகும். ஆசிரியர்கள் தொழில் திருப்தியும் சாதகமான மனவெழுச்சியும் கொண்டு செயற்படும் போதே, அவர்களது அறிவும் ஆற்றலும் மாணவர்களுக்கு முழுமையான பயனை அளிக்கும். இன்றேல், பாடசாலையின் பிரதான செயற்பாடான கற்றல் கற்பித்தல் செயன்முறை முற்றிலும் தோல்வியடையும் நிலை ஏற்படும்.

பாடசாலைகளில் போதிக்கப்படும் பாடங்களுக்குக் கல்வித் தகைமையின் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இலங்கையில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் பிரதான வழிமுறைகளுள் ஒன்றாக பட்டதாரி ஆசிரியர் நியமனம் விளங்குகின்றது. பல்கலைக்கழகமொன்றில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் போன்ற ஏதேனும் ஒரு துறையில் இளமானிப் பட்டம் பெற்றவர்களுக்காக வழங்கப்படும் ஆசிரியர் நியமனம் 'பட்டதாரி ஆசிரியர் நியமனம்' எனவும், இவ் ஆசிரியர்கள் என்ன பாடத்தைக் கற்பிப்பதற்காக நியமிக்கப்படுகின்றார்கள் என்பது 'பாட வகுதி' எனவும் கொள்ளப்படுகின்றது. பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கான விண்ணப்பப் படிவங்களில் பாட வகுதி என்பது, பூர்த்தி செய்யப்பட வேண்டிய பிரதானமான விடயங்களில் ஒன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது. பட்டப்படிப்பின் போது அவர்கள் கற்ற பாடங்களை அடிப்படையாகக் கொண்டே அவர்களுக்கான பாட வகுதி தீர்மானிக்கப்படுகின்றது.

இவ்வாறு பாட வகுதி குறிப்பிடப்பட்டு நியமனம் வழங்கப்படும் போது, குறித்த ஆசிரியர்கள் தமக்கென குறித்து ஒதுக்கப்பட்டுள்ள பாடத்தை நன்கு கற்பிக்கவும், அப்பாடம் தொடர்பில் தமது புலமையை மேலும் வளப்படுத்திக் கொள்ளவும் ஆர்வத்துடனும் இயலுமையுடனும் ஈடுபடுவர். அதனால் பாடசாலைச் சமூகம் பெரும் நன்மைகளை அனுபவிக்கும். ஆனால், பாட வகுதி குறிப்பிடப்படாது வழங்கப்படும் பட்டதாரி ஆசிரியர் நியமனம், குறித்த ஆசிரியர்களுக்குப் பல்வேறு வழிகளில் பாதிப்புகளை ஏற்படுத்துவதாக உள்ளது. அத்தகைய நியமனம், அவ் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணிகளை திறம்படவும் முழுமையான உள ஆர்வத்துடனும் மேற்கொள்வதில் பெரும் இடைஞ்சலாகவும் அமைந்து விடுகின்றது.

2008ம் வருடம் இலங்கை கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. பாட வகுதி குறிப்பிடப்படாது வெறுமனே பட்டதாரி ஆசிரியர் என வழங்கப்பட்ட இந்நியமனத்தினால் அந்நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள

போதிலும், பாட வகுதி குறிப்பிடப்படாத பட்டதாரி ஆசிரியர் நியமனத்தினால் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகள் செய்யப்படவில்லை. இது மிகவும் நுணுக்கமான ஒரு பிரச்சினையாகும்.

2007.03.16-ஆம் திகதி கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம், குறிப்பிட்ட பாடப் பிரிவுக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்து, போட்டிப் பரீட்சையின் மூலம் பெறப்படும் புள்ளிகளுக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில், விருப்பத் தெரிவின் பிரகாரம், குறித்த பாடம் வெற்றிடமாகக் காணப்பட்ட பாடசாலைகளுக்கே பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. எனினும், அந்நியமனக் கடிதத்தில், பாட வகுதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை (அன்சார் 2016)[1].

ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதற்கு முன்பாக, எந்தெந்தப் பாடசாலைகளில், என்னென்ன பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது என்பது துல்லியமாகக் கணிக்கப்பட்டே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கும் பாடம் பற்றியும் விண்ணப்பத்தில் கேட்கப்படுகின்றது. விண்ணப்பதாரிகள், தமது கல்வித் தகைமையின் அடிப்படையில் பாடங்களைத் தெரிவு செய்து விண்ணப்பிக்கின்றனர். எனினும், இறுதியாக நியமனம் வழங்கப்படும் போது, பாட வகுதி குறிப்பிடப்படாமல் நியமனம் வழங்குவது முற்றிலும் முரண்பாடான ஒரு செயலாகும்.

இவ்வாறு பாட வகுதி குறிப்பிடப்படாது பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றுப் பாடசாலைக்குச் சென்றவர்கள், பட்டப்படிப்பின் போது தாம் கற்ற பாடங்கள் அல்லாத வேறு பாடங்களைக் கற்பிக்குமாறு பணிக்கப்பட்டார்கள். அல்லது பட்டப்படிப்பின்போது தாம் கற்ற பாடங்களைக் கற்பிக்க வாய்ப்பின்றி அல்லது அனுமதியின்றி புறக்கணிக்கப்பட்டார்கள். பட்டப்படிப்பின்போது தாம் கற்ற மற்றும் தமக்குப் புலமையுள்ள ஒரு பாடத்தைக் கற்பித்து வரும் வேளையில், அப்பாடத்துக்கென ஓர் ஆசிரியர் புதிதாக நியமனம் பெற்று வருகின்ற போது, அவருக்காக அப்பாடத்தை விட்டுக் கொடுத்து விட்டு வேறு பாடத்தைக் கற்பிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அதனால் எந்தப் பாடத்தையும் தொடர்ச்சியாகக் கற்பிக்க அவர்களால் முடியவில்லை. கனிஷ்ட இடைநிலை வகுப்புகள் இல்லாத பாடசாலைகளுக்கு இவ்வாறு நியமனம் பெற்றுச் சென்றவர்கள், வர்த்தக அல்லது விஞ்ஞானப் பட்டதாரியாக இருந்தாலும், ஆரம்ப வகுப்புகளுக்குக் கற்பிக்க வேண்டிய நிலைக்கு ஆளானார்கள். இதனால் அவர்கள் பட்டப்படிப்பில் கற்ற பாடமும், பாடசாலையில் கற்பிக்கும் பாடமும் முரண்பாடுள்ள பாடங்களாக அமைந்தன. இவ்வாறான நிலையில் இவ்வாசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர்.

இப்பிரச்சினை, குறித்த ஆசிரியர்களினால் வலயக் கல்வி அலுவலகம், மாகாண கல்வி அலுவலகம் மற்றும் மாகாண கல்வி அமைச்சு போன்றவற்றின் கவனத்திற்குக் கொணரப்பட்டு, இதனைத் தீர்த்து வைக்கும் படியாகப் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும், இன்று வரையும் இது கவனத்திற் கொள்ளப்படவில்லை. விரைவில் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என அதிகாரிகளினால் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும், இப்பிரச்சினையின் முக்கியத்துவம் உணரப்படாமையால், அவ்வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான எவ்வித முன்னெடுப்புகளும் அலுவலக மட்டங்களில் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இத்தகைய நியமனத்தின் மூலம் பாதிக்கப்பட்டிருந்த ஆசிரியர்கள் சிலர் தமது மனக்கொதிப்புகளை கட்டுரைகளாக எழுதி இணையப் பக்கங்களில் பிரசுரித்தனர். அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் முரண்பாடுகளை வளர்த்துக் கொள்கின்றனர். சேவையில் ஈடுபாடற்ற மனநிலையை வெளிப்படுத்துகின்றனர். எனினும், பிரச்சினை இன்றுவரையும் தீரவில்லை.

**ஆய்வுப் பிரச்சினையும் முக்கியத்துவமும்**

பட்டதாரி ஆசிரியர் நியமனத்தின் போது, பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் பாடசாலை ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்காகப் பின்பற்றப்படும் வழிமுறைகளுள் பட்டதாரி ஆசிரியர் நியமனம் முக்கியமானதாகும். கலை, வர்த்தக, விஞ்ஞான பட்டதாரிகள் இவ்வாறு பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெறுகின்றனர். அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் போது, அவர்கள் எந்தப் பாடத்திற்குரிய ஆசிரியராக நியமிக்கப்படுகின்றார்கள் என்பது குறிப்பிடப்பட்டிருக்கும். இதுவே பாட வகுதி எனப்படுகின்றது. எனினும், இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பாட வகுதி குறிப்பிடப்படாமலும் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நிருவாக ரீதியாகவும், மனவெழுச்சி ரீதியாகவும், கற்பித்தல் செயன்முறை ரீதியாகவும் பல்வேறு நிலைகளில் அவர்களது பிரச்சினைகள் விரிவடைந்து செல்கின்றன. இதன் விளைவாக மனநிறைவோடும் வெற்றிகரமாகவும் கற்பித்தல் பணிகளில் ஈடுபட முடியாமல் அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். 'இவ்வாசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், மன உளைச்சலுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக அவர்கள் கீழுழைப்பு நிலையிலேயே தொடர்ந்தும் கடமையாற்ற வேண்டியுள்ளது (அன்சார் 2016)[1]. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அவர்களால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் எவ்விதப் பயனுமளிக்கவில்லை. உயர்மட்ட அதிகாரிகளும் இப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எனவே, இவ்விடயத்தின் முக்கியத்துவம் பற்றி உணர்த்துவதற்கு இது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்படுவது அவசியமாகின்றது.

இவ்விடயம் தொடர்பாக ஆய்வு செய்வதன் மூலம், குறித்த பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான தீர்வுகளை இனங்காண முடிவதோடு, அவர்கள் தமது கற்பித்தல் பணிகளை மனநிறைவோடும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கான

வாய்ப்புகள் உண்டாகும். மேலும், எதிர்காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது ஆசிரியர் நியமனங்களை கவனமாகக் கையாள்வதன் அவசியத்தை கல்வி அமைச்சும் கல்வி அலுவலகங்களும் புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பமும் ஏற்படும். பாட வகுதி குறிப்பிடப்படாது பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை என்பதனாலும் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

## ஆய்வு நோக்கம்

பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிதல்

ஆய்வு வினாக்கள்

I. பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் நிருவாக ரீதியான பிரச்சினைகள் எவை?
II. பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் மனவெழுச்சி ரீதியான பிரச்சினைகள் எவை?
III. பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் கற்பித்தலுடன் தொடர்பான பிரச்சினைகள் எவை?
IV. பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் தொழில் திருப்தி எவ்வாறுள்ளது?

## இலக்கிய மீளாய்வு

### ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் பிரச்சினைகளும்

மாணவர்களின் கற்றலில் கலைத்திட்டத்தின் தரம், கற்பித்தல் முறைகள், பாடசாலைக் கட்டடம் அல்லது பெற்றோரின் வகிபாகம் என்பவற்றை விட ஆசிரியர்களின் தரம் பெரும் தாக்கத்தைக் கொண்டுள்ளது (Hattie 2009)[2]. எனவே, கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் அறிவு, நடத்தை, மனப்பாங்கு, மனவெழுச்சி போன்ற அனைத்து விடயங்களிலும் தரமானவர்களாக விளங்க வேண்டும். இதற்காக, அவர்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளும் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வகுப்பறையில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நடத்தைசார்ந்த பிரச்சினைகள் மற்றும் கல்விசார்ந்த பிரச்சினைகள் என இரு வகைப்படுத்த

முடியும் (Salem 2011)[3]. இவற்றைத் தவிர, நியமனம் சார்ந்த பிரச்சினைகளும் கவனத்திற் கொள்ளப்படுவது அவசியமாகும்.

கற்பித்தல் துணைச்சாதனங்களின் பற்றாக்குறை, பலவீனமான கற்றற் சூழல், குறைவான ஊதியம் என்பன ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாகும் (Udoba 2014)[4]. ஊதியம், ஊக்குவிப்புக் கொடுப்பனவு, பதவியுயர்வு என்பன ஆசிரியர்களின் செயலாற்றுகையில் மிகுந்த உற்சாகத்தை வழங்குகின்றன (Mayaru. 2015)[5].

நேரமுகாமைத்துவம், பாடப்புலமை, கற்றல் கற்பித்தல் வளங்கள், மாணவர் புரிந்துணர்வு, பாடக்குறிப்பு எழுதுதல், மாணவர் நேரந்தவறாமை, வகுப்பறை முகாமைத்துவம், மாணவர் ஆர்வம், தகவல் ஆதாரங்கள், பணிச்சுமை மற்றும் மாணவர்களின் பலவீனமான பின்னணி என்பன புதிதாக இணைந்து கொள்ளும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகும் (Cecilia 2017)[6].

இக்கூற்றுகளின் அடிப்படையில், புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்கள் மட்டுமன்றி, பொதுவாக அனைத்து ஆசிரியர்களும் தமது கற்பித்தல் பணியின் போது பல்வேறு சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர் என்பதும், அப்பிரச்சினைகள் முறையாகத் தீர்த்து வைக்கப்படும் போதே, அவர்களது செயலாற்றுகை விளைதிறன் மிக்கதாக அமையும் என்பதும் தெளிவாகின்றது.

## பாட வகுதி குறிப்பிடப்படாது பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கல்

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம், குறிப்பிட்ட பாடப் பிரிவுக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்து போட்டிப் பரீட்சையின் மூலம் பெறப்படும் புள்ளிகளுக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் விருப்பத் தெரிவின் பிரகாரம், குறித்த பாடம் வெற்றிடமாகக் காணப்பட்ட பாடசாலைகளுக்கே ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. எனினும், அந்நியமனக் கடிதத்தில், பாட வகுதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை (அன்சார் 2016)[1]. இதுவே பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நிமயனம் வழங்கப்பட்ட ஆசிரியர் அணியொன்றை உருவாக்கியுள்ளது.

இவ்வகை ஆசிரியர்கள் தமது நிமயனக் கடிதத்தில் பாட வகுதி குறிப்பிடப்படாமையால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. பாட வகுதி குறிப்பிடப்படாமையால், இவ்வாசிரியர்கள் நியமிக்கப்படும் பாடசாலையின் வகை, அங்கு பொறுப்பிலுள்ள அதிபரின் மனநிலை என்பன இவ்வாசிரியர்கள் கற்பிக்கும் பாடம் எது என்பதைத் தீர்மானிக்கும் சக்திகளாக அமைகின்றன.

நியமனக் கடிதத்தில் பாட வகுதி குறிப்பிடப்படாததினால், நியமனம் கிடைக்கப் பெற்ற பாடசாலையின் தன்மைக்கேற்ப, வேறு பாடங்களை கற்பிப்பதற்கான தகைமையில்லாத நிலையிலும், அப்பாடசாலையின் அதிபர்கள் மற்றும் வலயக் கல்வி அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக, பொருத்தமற்ற துறைகளுக்குக் கற்பிக்க குறித்த ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள். அதாவது விஞ்ஞான, வர்த்தக பட்டதாரிகள் ஆங்கிலப் பாடத்திற்கு விண்ணப்பித்து, அப்பாடம் வெற்றிடமாகக் காணப்பட்ட பாடசாலைக்கு நியமனம் கிடைக்கப் பெற்ற போதும், பாட வகுதி குறிப்பிடப்படாததன் காரணத்தினால் ஆரம்பப் பிரிவுக்குக் கற்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது (அன்சார்2016)[1] .

விஞ்ஞானப் பட்டதாரி ஒருவர், பாட வகுதி குறிப்பிடப்படாமல் ஆரம்பப் பாடசாலையொன்றுக்கு பட்டதாரி ஆசிரியராக நியமிக்கப்படும் போது, அங்கு விஞ்ஞானம் கற்பிக்க முடியாது போய்விடுவதுடன், தனது பட்டத்துடன் தொடர்பற்ற வகையில், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குக் கற்பிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார். அதேபோன்று குறித்த பாடமொன்றிற்கு அப்பாடசாலையில் ஆசிரியர் இல்லையெனில், அது தனது பட்டத்துடன் தொடர்பற்ற பாடமாக இருப்பினும் அதனைக் கற்பிக்க வேண்டிய நிலைக்கு அவ்வாசிரியர் தள்ளப்படுகின்றார். இவ்வாறு நியமனம் பெற்று வரும் ஒருவர் வர்த்தகப் பட்டதாரியாக இருந்தாலும், குறித்த பாடசாலையில் கலைத்துறை சார்ந்த பாடம் கற்பிக்க ஆசிரியர் இல்லையெனில், அந்தப் பாடத்தையே கற்பிக்குமாறு அங்குள்ள அதிபர் வற்புறுத்துவார். அது மாத்திரமன்றி, இவ்வாறு நியமனம் பெற்ற ஒருவர், தனக்குப் பொறுப்பளிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பாடத்தை - அது தனது பட்டத்துடன் தொடர்பில்லாத பாடமாக இருந்தாலும் - கற்பித்து, அப்பாடம் தொடர்பான தனது புலமையை மேம்படுத்தி வரும் போது, திடீரென குறித்த பாடத்திற்கு, புதிதாக ஓர் ஆசிரியர் நியமனம் பெற்று வருவார். அச்சமயம், அதிபரினதும் அதிகாரிகளினதும் வற்புறுத்தலின் பேரில், புதிதாக வந்த ஆசிரியருக்கு அப்பாடத்தை வழங்கி விட்டு, இவ்வாசிரியர் வேறு பாடத்தைப் புதிதாகக் கற்பிக்கத் தொடங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான நிலைகளினால், குறித்த ஆசிரியர்கள் தமது தேவை நிறைவேறாத விரக்திக்கும் பாதகமான மனவெழுச்சிக்கும் ஆளாகின்றனர்.

## தொழில் திருப்தி

வேலையாட்களின் தொழில் செயலாற்றுகையானது வேலைத்தளத்திலுள்ள அவர்களது மனவெழுச்சியிலேயே தங்கியுள்ளது என்பது பொதுவான கோட்பாடாகும். 'ஒருவரது செயலாற்றுகையில் அவரது வலுவான மனவெழுச்சியின் செல்வாக்கு இருக்கின்றது (Ali 2010)[7]. எனவே, பாடசாலைகளில் செயலாற்றும் ஆசிரியர்கள் சாதகமான மனவெழுச்சி நிலையைக் கொண்டிருப்பது அவசியமாகும். அதுவே அவர்களுக்குத் தொழில் திருப்தியை ஏற்படுத்தும் காரணியாகவும் அமையும்.

'கிழக்கு மாகாணத்தில் வழமைக்கு மாற்றமாக 2008ல் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனத்தினூடாக புதிய வகையான ஆசிரியர் நியமனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதுதான் 'பட்டதாரி ஆசிரியர் நியமனம்'. எந்தவொரு பாடமும் குறிப்பிடப்படாது வெறுமனே பட்டதாரி ஆசிரியர் நியமனம் எனக் குறிப்பிட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்நியமனத்தின் மூலமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் சாதாரண சுகாதார தொழிலாளி ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய தொழில் திருப்தி கூட இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றனர் (அன்சார்2016).[1]

தொழில் திருப்தியின்மை காரணமாக, தமது வாண்மைத்துவத்தை விருத்தி செய்வதிலும், கற்பித்தலுடன் தொடர்பான நவீன எண்ணக்கருக்களைப் பரீட்சிப்பதிலும் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. தொழில் திருப்தியும் ஊக்கலும் வாண்மைத்துவ விருத்தியின் பிரதான கூறுகளாகும் (Linda 2010)[8].

## கோட்பாட்டுக் கட்டமைப்பு (Theoretical Framework)

இவ்வாய்வு, பிரடெரிக் ஹேஸ்பேக்கின் இரு காரணிக் கோட்பாட்டின் அடிப்படையில், ஆசிரியர்களின் தொழில் திருப்தி பற்றி ஆராய்கின்றது. மனிதர்களின் தொழில் திருப்தியானது இரு வகைக் காரணிகளில் தங்கியுள்ளது என அக்கோட்பாடு கூறுகின்றது. ஊக்கற் காரணிகள் மற்றும் சுகாதாரக் காரணிகள் என்பன அவையாகும். சாதனைகள், அங்கீகாரம், தொழிலின் தன்மை, பொறுப்புடைமை மற்றும் விருத்திக்கான வாய்ப்புகள் என்பன ஊக்கற் காரணிகள் எனவும், அவை தொழில் திருப்தியை ஏற்படுத்துபவை எனவும் அக்கோட்பாடு விளக்குகின்றது. சம்பளம், இரண்டாம் நிலை வேலைப் பண்புகள், சகபாடிகளுடனான இடைத்தொடர்பு, பௌதீக வேலைத்தளம் மற்றும் மேற்பார்வையாளருக்கும் பணியாளருக்கும் இடையிலான உறவு என்பன சுகாதாரக் காரணிகள் எனவும் அவை தொழில் திருப்தியை ஏற்படுத்தாதவை எனவும் அக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. இக்கோட்பாட்டின் அடிப்படையில், பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் தொழில் திருப்திக்கான காரணிகளை பெற்றுள்ளார்களா அல்லது இழந்துள்ளார்களா என இவ்வாய்வு ஆராய்கின்றது.

## முறையியல் (Methodology)

### ஆய்வு வடிம் (Research Design)

இவ்வாய்வு, சம்பவக் கற்கை (Case Study) ஆய்வு வடிவத்தை பின்பற்றி பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து நேர்காணல் மூலம் அவர்களது அனுபவங்கள், கருத்துகள், வியாக்கியானங்கள் மற்றும்

அவர்களது தொழில்திருப்தி தொடர்பான அபிப்பிராயங்கள் என்பன சேகரிக்கப்பட வேண்டி இருந்தமையால் சம்பவக் கற்கை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டது.

**இலக்குக் குடித்தொகை (Target Population)**

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்திற்குட்பட்ட கோறளைப்பற்று மேற்கு கோட்டப் பாடசாலைகளில் பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றுக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் 43 ஆசிரியர்கள் இவ்வாய்வுக்கான இலக்குக் குடித்தொகையாகக் கொள்ளப்பட்டனர். இவர்களில் 27 பேர் ஆண்களும், 16 பேர் பெண்களுமாவர்.

**மாதிரி மற்றும் மாதிரியெடுப்பு முறை (Sample and sampling technique)**

இலக்குக் குடித்தொகையிலிருந்து எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில், ஒவ்வொரு வகையிலிருந்தும் 30% எனும் அடிப்படையில் 8 ஆண் ஆசிரியர்களும் 5 பெண் ஆசிரியைகளுமாக 13 ஆசிரியர்கள் இவ் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அட்டவணை 1
*மாதிரியெடுப்பு முறை*

| பங்குபற்றுனர்கள் | இலக்கு குடித்தொகை | மாதிரி அளவு | நூற்று வீதம் | மாதிரியெடுப்பு நுட்பம் |
|---|---|---|---|---|
| பாட வகுதி குறிப்பிடாது நியமனம் பெற்ற ஆசிரியர்கள் | 43 | 13 | 30% | Simple random sampling எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு |

அட்டவணை 2 இல் மாதிரிப் பரம்பலின் அடிப்படை விபரங்கள் தரப்பட்டுள்ளன:

அட்டவணை 2
*மாதிரிப் பரம்பலின் விபரம்*

| ஆசிரியர் இலக்கம் | பால்நிலை | பாடசாலை வகை | கல்வித் தகமை | கற்பிக்கும் பாடம் |
|---|---|---|---|---|
| 01 | ஆண் | 1AB | B.A. | புவியியல் |
| 02 | ஆண் | Type II | BBA | ஆரம்பக் கல்வி |
| 03 | ஆண் | 1AB | B.A. | குயுரிமைகல்வி |
| 04 | ஆண் | Type II | B.A. | தமிழ் |

| | | | | |
|---|---|---|---|---|
| 05 | ஆண் | 1AB | B.A. | தமிழ் |
| 06 | ஆண் | Type II | B.A. | ஆரம்பக்கல்வி |
| 07 | ஆண் | 1C | B.A. | தமிழ் |
| 08 | ஆண் | Type II | B.Com | ஆரம்பக்கல்வி |
| 09 | பெண் | 1AB | B.A | தமிழ் |
| 10 | பெண் | 1C | B.Com | தமிழ் |
| 11 | பெண் | Type III | B.A. | ஆரம்பக்கல்வி |
| 12 | பெண் | Type II | B.A. | வரலாறு |
| 13 | பெண் | Type III | B.A. | ஆரம்பக்கல்வி |

**தரவு சேகரிப்புக் கருவி (Data Collection Instrument)**

இவ்வாய்வுக்காகப் பண்புசார் தரவுகளைச் சேகரிக்க அரை கட்டமைக்கப்பட்ட நேர்காணல் (Semi Structured Interview schedule) பயன்படுத்தப்பட்டது. இவ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்த 13 ஆசிரியர்களிடமும் நேர்காணல் நடத்தப்பட்டது. ஒவ்வொரு ஆசிரியரிடமும் அதிகபட்சமாக 30 நிமிடங்கள் நேர்காணலுக்கெனப் பெறப்பட்டன. ஆய்வின் பிரதான நோக்கம் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றின் அடிப்படையில் நேர்காணலுக்கான வினாக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. மூலத் தரவுகளைப் பாதுகாக்கும் நோக்கில், மாதிரிகளின் நேர்காணல்கள் அவர்களது அனுமதியுடன் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. இரு காரணிக் கோட்பாட்டின் அடிப்படையிலான வினாக்களைக் கொண்டு ஆசிரியர்களின் தொழில் திருப்தி தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**தரவுப் பகுப்பாய்வு முறை (Data Analysis method)**

இவ்வாய்வின் பண்புசார் தரவுகளை பகுப்பாய்வு செய்ய கருப்பொருள் சார் பகுப்பாய்வு முறை (Thematic analysis method) பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நேர்காணல் முடிவுற்ற பின்னும், ஆரம்பநிலை தரவுப் பகுப்பாய்வு (Preliminary Data Analysis) மேற்கொள்ளப்பட்டது. தரவு சேகரிப்பு முடிவுற்ற பின், மூலத்தரவுகள் எழுத்து வடிவமாக்கப்பட்டன. பின், அவற்றில் பிரதான கூற்றுகள் அடையாளப்படுத்தப்பட்டு, குறிமுறையாக்கம் (Coding) செய்து வகைப்படுத்தப்பட்டன. குறிமுறையாக்கமானது முன்கூட்டியே வடிவமைக்கப்பட்டிருந்த கருப்பொருள்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. பின், இறுதிக் கருப்பொருள்கள் தயாரிக்கப்பட்டன.

**கண்டுபிடிப்புகள் (Findings)**

பாட வகுதி குறிப்பிடப்படாது பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நிருவாக ரீதியாகவும், மனவெழுச்சி ரீதியாகவும் கற்பித்தல் ரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள் என்பதை ஆய்வின் கண்டுபிடிப்புகள் உறுதி செய்கின்றன.

**நிருவாக ரீதியான பிரச்சினைகள் (Problems related to Administration)**

கோறளைப்பற்று மேற்கு கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் முக்கியமானவை நிருவாக ரீதியான பிரச்சினைகளாகும்.

நிருவாக ரீதியான பிரச்சினைகளுள் பதவியுயர்வுக்கான வாய்ப்புகளை இழத்தல் என்பது முக்கியமானது. இலங்கை கல்வி நிருவாக சேவை போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் போது, பட்டப்படிப்பில் கற்ற பாடத்தை பாடசாலையில் கற்பித்த அனுபவம் முக்கிய நிபந்தனையாகக் கொள்ளப்படுகின்றது. எனவே, பாட வகுதி குறிப்பிடப்படாத இவ்வாசிரியர்கள் தாம் பட்டப்படிப்பில் கற்ற பாடமும் பாடசாலையில் கற்பிக்கும் பாடமும் வேறுபடுவதனால், இவ்வாறான பதவியுயர்வுகளுக்கான வாய்ப்புகளை இழக்க நேரிடுகின்றது. இது தொடர்பாக ஆசிரியர் ஒருவர் இவ்வாறு விளக்கினார்:

> *“இவ்வகை நியமனமானது விளம்பரப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு முரணானதாகும். அத்துடன் பாடம் குறிப்பிடப்படாத இத்தகைய ஆசிரியர்களை ஆளணிக் கணிப்பீட்டில் எத்தகைய பாட வகுதிக்கும் உட்படுத்த முடியாத நிலை காணப்படுவதுடன், நிலையான பாடவகுதி ஒன்று இல்லாமையின் காரணமாக இலங்கை கல்வி நிருவாக சேவை போன்ற உயரிய பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகளுக்கும் விணப்பிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது.”*

நிருவாக ரீதியான முரண்பாடுகள் தோன்றல் என்பது இவ்வகையான மற்றொரு பிரச்சினையாகும். தமது நிலை குறித்து பல்வேறு முறைப்பாடுகள் செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருக்கின்ற அல்லது ஏதேனும் காரணங்களைச் சொல்லி நழுவ முனைகின்ற கல்வி அதிகாரிகள் மீது இவ்வாசிரியர்கள் அதிருப்தி கொள்கின்றனர். கலைத்திட்ட அமுலாக்கலின் போது அதிபருடன் உடன்பட்டுச் செல்ல முடியாத நிலைக்கு ஆளாகின்றனர். இதனால் நிருவாக ரீதியான முரண்பாடுகள் தோன்றுகின்றன. இது அவர்களது கற்பித்தல் பணியைப் பெரிதும் பாதிக்கின்றது.

இவ்வகையான பிரச்சினைகளுள் அரச நிதி வீண்விரயமாதலும் முக்கியமானது. பொருத்தமற்ற ஆளணியிடல் காரணமாக தொழில் திருப்தியற்ற நிலையில் இருக்கும் இவ்வாசிரியர்களுக்கு, பல்வேறு செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. தாம் விரும்பாத, தமக்குப் புலமையில்லாத ஒரு பாடத்தை, நிர்ப்பந்தத்தின் காரணமாக கற்பித்து வரும் போது, அப்பாடம் தொடர்பான செயலமர்வுகளுக்கு இவ்வாசிரியர்களை வற்புறுத்தி அனுப்பி வைப்பது அவர்களுக்கு மேலும் அசௌகரியத்தையும் அதிருப்தியையும் உண்டாக்குவதாக உள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினால் அரச நிதி வீண் விரயம் செய்யப்படுகின்றது. இதனடிப்படையில் பாடவகுதி குறிப்பிடப்படாது பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற பட்டதாரிகள் நிருவாக ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக ஆய்வின் கண்டுபிடிப்புகள் உறுதி செய்கின்றன.

**மனவெழுச்சி ரீதியான பிரச்சினைகள் (Problems related to Emotional)**

கோறளைப்பற்று மேற்கு கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் மனவெழுச்சி ரீதியான பிரச்சினைகளும் முக்கியமானவையாகும்.

இவ்வகை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள உளநெருக்கடி, மிகவும் கவனிக்கப்பட வேண்டிய மனவெழுச்சி ரீதியான பிரச்சினையொன்றாகும். தாம் விரும்பாத ஒரு பணியில் வற்புறுத்தி தாம் அமர்த்தப்பட்டுள்ளதாக இவ்வாசிரியர்கள் கருதுகின்றனர். தாம் விரும்பாத, தமக்கு எவ்விதப் புலமையுமில்லாத பாடங்களைக் கற்பிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள், வேறு வழியின்றி வேண்டா வெறுப்பாக அப்பாடங்களைக் கற்பித்து வருகின்றனர். அதனால் பெரும் மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். தம்மை ஒரு உளநோயாளியெனக் கருதிக் கொள்கின்றனர். தாம் கீழுழைப்பாளர்களாக ஆக்கப்பட்டுள்ளதாக எண்ணி மனம் வெதும்புகின்றனர். வேறு தொழிலைத் தேடும் நிலைக்குள்ளாகியுள்ளனர். இது பற்றி ஆசிரியர் ஒருவரின் கூற்று இவ்வாறு அமைந்துள்ளது:

> *“இவ்வகை நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், மன உளைச்சலுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக அவர்கள் கீழுழைப்பு நிலையிலேயே தொடர்ந்தும் கடமையாற்ற வேண்டியுள்ளது.”*

இவ்வகை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள தொழில் திருப்தியின்மை அவர்கள் மனவெழுச்சி ரீதியாக எதிர்கொள்ளும் மற்றொரு முக்கிய பிரச்சினையாகும். தமக்கு விருப்பமில்லாத ஒரு பணியென ஆசிரியர் தொழிலை அவர்கள் கருதும் நிலைக்கு இந்நியமனம் இவ்வாசிரியர்களைக் கொண்டு சென்றுள்ளது. ஆசிரியர் பணியில் எவ்வித திருப்தியுமற்ற நிலையிலேயே அவர்கள் பணியாற்றி வருகின்றனர். இதனால், பாடசாலையின்

போதனை சார்ந்த பணிகள் எவற்றிலும் ஈடுபாட்டுடன் செயற்பட முடியாத நிலைக்கு அவர்கள் ஆளாகின்றனர்.

சுயவிருத்திக்கான வாய்ப்பை இழத்தல் என்பது இவ்வகையான மற்றொரு பிரச்சினையாகும். பட்டப்படிப்பின் போது கற்ற பாடங்களிலேயே இவ்வாசிரியர்கள் புலமையைக் கொண்டுள்ளனர். எனினும், இவற்றுக்குப் புறம்பான பாடங்களைக் கற்பிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இவ்வகை ஆசிரியர்கள், தமக்கென ஒரு பாடத்தைக் குறிப்பாக்கிக் கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகின்றனர். தமக்கென பாடமொன்று குறிப்பாக்கப்படுமானால், அப்பாடத்தில் மேற்படிப்புகளை மேற்கொண்டு, அப்பாடம் தொடர்பான திறன்களையும் வாண்மைத்துவத்தையும் விருத்தி செய்யும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால், குறித்த நியமனத்தினால் இவ்வாறான சுயவிருத்திக்கான வாய்ப்புகளை இழக்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது உள ரீதியாக அவர்களைப் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

இதனடிப்படையில் பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் மனவெழுச்சி ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதை ஆய்வின் கண்டுபிடிப்புகள் உறுதி செய்கின்றன.

**கற்பித்தலுடன் தொடர்பான பிரச்சினைகள் (Problems related to teaching)**

கோறளைப்பற்று மேற்கு கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் கற்பித்தலுடன் தொடர்பான பிரச்சினைகள் பல அடையாளங் காணப்படுகின்றன. கற்பிக்கும் பாடத்தில் பாடப்புலமையற்ற நிலையில் ஆசிரியர்கள் காணப்படுகின்றமை இவ்விதமான முக்கிய பிரச்சினையாகும். இவ்வாசிரியர்கள், பட்டப்படிப்பின் போது தாம் கற்ற பாடங்களை விடுத்து, வேறு பாடங்களையே கற்பித்து வருகின்றனர். உதாரணமாக, சமயப் பாடத்தில் விசேட கற்கை நெறியைப் பூரணப்படுத்தியவர் புவியியல் கற்பித்து வருகின்றார். வர்த்தகப் பட்டதாரி ஒருவர் ஆரம்பப் பிரிவில் தரம் 1க்கு (Grade 1) கற்பித்து வருகின்றார். எனவே, தாம் கற்பிக்கும் பாடத்தில் போதிய புலமையற்றவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். விளைதிறனற்ற கற்பித்தல் செயன்முறை என்பது இவ்வகையான மற்றொரு பிரச்சினையாகும். பாடப்புலமையின்மை காரணமாக விளைதிறனான கற்பித்தல் செயன்முறையை இவர்களால் மேற்கொள்ள முடியாதுள்ளது. பாடவேலைத்திட்டம் தயாரித்தல், பாடக்குறிப்புகளை எழுதுதல், கற்பித்தல் துணைச் சாதனங்களைத் தயார்படுத்தல், மதிப்பீடு செய்தல் போன்ற விடயங்களில் இவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். மேலும், ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தேவைக்கேற்ப ஆடல், பாடல் போன்றவற்றுடன் தமது கற்பித்தலைக் கட்டியெழுப்பிச் செல்ல வேண்டியுள்ளது. எனினும், இது தொடர்பான எவ்வித அறிவும் அனுபவமும் இன்றி,

ஆரம்பப் பிரிவில் கற்பிக்கச் செல்லும் போது, விளைதிறனான கற்பித்தலை இவ்வகை ஆசிரியர்களால் நிறைவேற்ற முடியாது போய்விடுகின்றது. வினாத்தாள் மதிப்பீடு தொடர்பான பிரச்சினைகளையும் இவ்வாசிரியர்கள் எதிர்கொள்கின்றனர். கற்பித்தல் செயன்முறையில் மதிப்பீடு செய்தல் முக்கிய பகுதியாகும். எனினும், பாடப்புலமையின்மை காரணமாகவும் விளைதிறனான கற்பித்தல் செயன்முறையை மேற்கொள்ள முடியாமை காரணமாகவும் மதிப்பீட்டுச் செயன்முறைகளின் போதும் பெரும் இடர்களை இவ்வாசிரியர்கள் எதிர்கொள்கின்றனர். ஆசிரியர் ஒருவர் இது தொடர்பாக இவ்வாறு விளக்குகின்றார்:

> *"பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான பிழைகளினால் மாணவர்களின் கற்றல் செயற்பாடு பெரிதும் பாதிக்கப்படுவது மாத்திரமன்றி, இவ்வாசிரியர்களின் அடிப்படை உரிமையும் இதனால் மீறப்பட்டுள்ளது."*

மற்றோர் ஆசிரியர், பாடப்புலமையின்மையுடன் கற்பித்தலில் ஈடுபடுவது தொடர்பாக விமர்சனம் முன்வைத்துக் கருத்துரைத்தார்.

> *"குறித்த ஒரு பாடத்தில் பாடப்புலமையற்ற ஓர் ஆசிரியரிடம் அப்பாடத்தைக் கற்பிக்குமாறு வற்புறுத்துவது மாணவர்களுக்குச் செய்யும் மிகப் பெரும் அநீதியாகும். ஆசிரியரும் மாணவரும் அப்பாடத்தில் எவ்வித தெளிவும் காணாமலே நேரம் விரயமாகின்றது. அதற்காக செலவழிக்கப்படும் அனைத்து நிதியும் வீணடிக்கப்படுகின்றது. மிகப் பெறுமதியான நேரமும், வளங்களும் அரச நிதியும் இவ்வாறு வீணடிக்கப்படுவதற்கு, இத்தகைய நியமனத்தை வழங்கிய அதிகாரிகளே பொறுப்புக் கூற வேண்டும்."*

### ஆசிரியர்களின் தொழில் திருப்தி (Job satisfaction of teachers)

பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் தொழில் திருப்திக்கான காரணிகளைப் பெறவில்லை என்பதை ஹேஸ்பேக்கின் இரு காரணிக் கோட்பாட்டின் அடிப்படையிலமைந்த வினாக்களின் பிரகாரம் பெறப்பட்ட தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. அட்டவணை 3 இல் தொழில் திருப்தி தொடர்பான வினாக்களுக்கு ஆசிரியர்கள் வழங்கிய பதில்களின் அடிப்படையில், சகல ஆசிரியர்களும் சம்பளம், இரண்டாம் நிலை வேலைப் பண்புகள், சகபாடிகளுடனான இடைத்தொடர்பு, பௌதீக வேலைத்தளம், மேற்பார்வையாளருக்கும் பணியாளருக்கும் இடையிலான உறவு என்பன தமக்குத் திருப்திகரமாக உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால், சாதனைகள், அங்கீகாரம், தொழில் ஆர்வம், பொறுப்புடைமை, விருத்திக்கான வாய்ப்புகள் ஆகிய விடயங்கள் தமக்குத் திருப்திகரமாகக் கிடைக்கவில்லை என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அட்டவணை 3

*ஆசிரியர்களின் தொழில் திருப்தி தொடர்பான வினாக்களுக்கான பகுப்பாய்வு*

| தொழில் திருப்தியை ஏற்படுத்தாதவை | | தொழில் திருப்தியை ஏற்படுத்துபவை | |
|---|---|---|---|
| சம்பளம் | ✓ | சாதனைகள் | ✕ |
| இரண்டாம் நிலை வேலைப் பண்புகள் | ✓ | அங்கீகாரம் | ✕ |
| சகபாடிகளுடனான இடைத்தொடர்பு | ✓ | தொழில் ஆர்வம் | ✕ |
| பௌதீக வேலைத்தளம் | ✓ | பொறுப்புடைமை | ✕ |
| மேற்பார்வையாளருக்கும் பணியாளருக்கும் இடையிலான உறவு | ✓ | விருத்திக்கான வாய்ப்புகள் | ✕ |

இக்கோட்பாடு செயலாற்றுகை, அங்கீகாரம், தொழிலின் தன்மை, பொறுப்புடைமை மற்றும் விருத்திக்கான வாய்ப்புகள் என்பன ஊக்கற் காரணிகள் அல்லது தொழில் திருப்தியை ஏற்படுத்துபவை எனவும், சம்பளம், இரண்டாம் நிலை வேலைப் பண்புகள், சகபாடிகளுடனான இடைத்தொடர்பு, பௌதீக வேலைத்தளம் மற்றும் மேற்பார்வையாளருக்கும் பணியாளருக்கும் இடையிலான உறவு என்பன சுகாதாரக் காரணிகள் அல்லது திருப்தியை ஏற்படுத்தாதவை எனவும் எடுத்துரைக்கின்றது. பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் தமது கோரிக்கை நிறைவேறாமையினாலும், தாம் எதிர்பார்த்த பாடம் தமக்கு வழங்கப்படவில்லை என்பதனாலும் தமது செயலாற்றுகைகளை மிகக் குறைவாகவே மேற்கொண்டு வருகின்றனர். அவர்களது செயலுக்கும் முயற்சிகளுக்கும் பாடசாலை மற்றும் அலுவலக மட்டங்களில் போதியளவு அங்கீகாரமும் கிடைப்பதில்லை. தொழிலின் தன்மை அவர்கள் எதிர்பார்த்ததற்குப் புறம்பாக அமைந்துள்ளது. எந்தப் பாடமும் அவர்களுக்கு முழுப் பொறுப்பாக வழங்கப்படுவதில்லை. மேலும் அவர்கள் குறித்த ஒரு பாடத்தில் தம்மை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புகளும் இல்லை. அத்துடன் ஆசிரியர்கள் தமது தொழில்களில் திருப்தி நிலையுடன் காணப்படுகின்றனரா எனக் கேட்ட போது பாட வகுதி குறிப்பிடாமல் இருப்பதன் காரணமாகத் தாம் இத் தொழிலில் முழுமையான திருப்தியுடன் இல்லை என சகல ஆண், பெண் ஆசிரியர்களும் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் நோக்கும் போது இவ்வகை நியமனம் பெற்ற ஆசிரியர்களின் தொழில் திருப்தி எதிர்மறையாகவே உள்ளது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. அத்தோடு, இவ்வகை நியமனத்தினால் ஆசிரியர்கள் உள ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது. இது அவர்களது தொழில் திருப்தியின்மைக்குக் காரணமாகின்றது எனவும் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நிமயனம் வழங்கப்பட்டமையால், குறித்த ஆசிரியர்கள் தமக்கென குறிப்பிட்டதொரு பாடத்தை வரையறுத்துக் கொள்ள முடியாத நிலையில் தமது தொழிலில் திருப்தியின்றிக் காணப்படுகின்றனர். இது பற்றி ஆசிரியர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> *“இந்நியமனத்தின் மூலமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் சாதாரண சுகாதார தொழிலாளி ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய தொழில் திருப்தி கூட இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றனர்.”*

அதேவேளை சம்பளம், இரண்டாம் நிலை வேலைப் பண்புகள், சகபாடிகளுடனான இடைத்தொடர்பு, பௌதீக வேலைத்தளம் மற்றும் மேற்பார்வையாளருக்கும் பணியாளருக்கும் இடையிலான உறவு ஆகிய சுகாதாரக் காரணிகளை இவ்வகை ஆசிரியர்கள் போதியளவு கொண்டுள்ளனர். ஆனால், அவை தொழில் திருப்திக்கான காரணிகள் அல்ல என இக்கோட்பாடு கூறுவதன் அடிப்படையில், இவ்வகை ஆசிரியர்கள் தமது தொழிலில் திருப்தியின்மையுடனேயே கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்ற முடிவைப் பெறமுடியுமாக உள்ளது. இது தொடர்பாக ஆசிரியர் ஒருவர் பின்வருமாறு கருத்துரைத்தார்:

> *“இந்த ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு வேறு ஏதேனும் அரசாங்கத் தொழில் கிடைத்தால் மாறிவிடுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். அதற்காக பல முற்சிகளையும் செய்து வருகின்றேன்.”*

இவ்வகையில், பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் தொழில் திருப்தியற்ற நிலையிலேயே கடமையாற்றி வருகின்றனர் என்பதை ஆய்வு முடிவுகள் உறுதி செய்கின்றன.

## முடிவுரை (Conclusion)

பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் கல்விச் செயன்முறையைப் பாதிக்கக் கூடிய மிகவும் தீவிரமான காரணிகளாகும். ஆசிரியர்கள் தொழில் திருப்தியும் சாதகமான மனவெழுச்சியும் கொண்டு செயற்படும் போதே, அவர்களது அறிவும் ஆற்றலும் மாணவர்களுக்கு முழுமையான பயனை அளிக்கும். இன்றேல், பாடசாலையின் பிரதான செயற்பாடான கற்றல் கற்பித்தல் செயன்முறை முற்றிலும் தோல்வியடையும் நிலை ஏற்படும். பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் காரணமாக தொழில் திருப்தியுமின்றி, சாதகமான மனவெழுச்சியுமின்றி செயற்படும் நிலை தோன்றியுள்ளது. குறித்த ஆசிரியர்களின் இடத்திலிருந்து நோக்கும் போது, இது அவர்களுக்கும் அவர்களிடம் கற்கும் மாணவர்களுக்கும் இழைக்கப்படுகின்ற மிகப் பெரும் அநீதி மட்டுமன்றி, பாடசாலை சமூகத்துக்குப் பெரும் துரதிர்ஷ்டமாகவும், அரசாங்கத்துக்கு மிகப் பெரும் வீண்விரயமாகவும் அமைகின்றது என இவ்வாய்வின் பெறுபேறுகள் தெரிவிக்கின்றன.

பாட வகுதி குறிப்பிடப்படாமல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நிருவாக ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர் என

இவ்வாய்வு தெரிவிக்கின்றது. தமது பட்டப்படிப்புடன் தொடர்பற்ற பாடங்களை கற்பிப்பதனால் பதவியுயர்வுகளுக்கான வாழ்ப்புகளை அவர்கள் இழக்க வேண்டிய நிலையும், அதிபர் மற்றும் கல்வி அதிகாரிகள் போன்றோருடன் முரண்பட வேண்டிய நிலையும் அவர்களுக்கு ஏற்படுகின்றன. இந்நிலைகள் அவர்களது வாண்மைத்துவத்திலும் சேவையிலும் பாதிப்புகளை உண்டாக்குகின்றன.

மேலும், இவ்வகை நியமனத்தினால் பட்டப்படிப்பில் தாம் கற்ற பாடங்களை பாடசாலையில் கற்பிக்க முடியாத நிலையும், பட்டப்படிப்பில் தாம் கற்காத பாடங்களைக் கற்பிக்க வேண்டிய நிலையும் ஏற்படுவதால், குறித்த ஆசிரியர்கள் உளவியல் நெருக்கடி, தொழில் திருப்தியின்மை போன்ற மனவெழுச்சி சார் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். அதனால் வேண்டா வெறுப்பாகவும், வெறுமனே வருமானத்திற்காக மட்டும் என்ற நோக்குடனும் கற்பித்தல் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வகை நியமனத்தினால், கற்பித்தல் தொடர்பான பிரச்சினைகளையும் குறித்த ஆசிரியர்கள் எதிர்கொள்கின்றனர். பாடவேலைத் திட்டங்களைத் தயாரித்தல், பாடக்குறிப்புகளை எழுதுதல், கற்றல் துணைச் சாதனங்களைத் தயார்படுத்தல் என்பனவற்றை விளைதிறனாகச் செய்வதற்கு அவர்களது குறைவான பாடப்புலமை பெரும் தடையாக உள்ளது. தமக்குப் புலமையற்ற பாடங்களைக் கற்பிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாவதாலும், அப்பாடம் தொடர்பான திறன்கள் போதியளவு இன்மையாலும் விளைதிறனான கற்பித்தலை மேற்கொள்ள முடியாது சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

மேலும் இவ்வகை நியமனத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் தொழில் திருப்தியற்ற நிலையிலேயே கடமையாற்றி வருகின்றனர் என இவ்வாய்வு சுட்டிக் காட்டுகின்றது. தாம் பிரத்தியேகமான பொறுப்புகள் எதுவுமற்றவர்கள் என அவர்கள் தம்மைக் கருதிக் கொள்வதாலும், தமது விருத்திக்கான வாய்ப்புகள் தடைப்படுவதாலும் அவர்களது செயலாற்றுகை மிகவும் மந்தமான நிலையில் காணப்படுகின்றது. அவ்வாறான செயலாற்றுகையினால், அவர்களுக்கான அங்கீகாரம் தடைப்படுகின்றது. இதனால் அவர்களது தொழில் திருப்தியின்மை மேலும் தீவிரமடையும் நிலை தோன்றுகின்றது.

## விதந்துரைகள் (Recommendations)

இவ்வாய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் போது, பாட வகுதி கண்டிப்பாகக் குறிப்பிடப்பட வேண்டும். பாட வகுதி குறிப்பிடப்படும் போது, குறித்த பட்டதாரிகள் தமது பட்டத்தின் போது கற்ற பாடங்கள், அவர்கள் விண்ணப்பித்துள்ள பாடம், அப்பாடம் தொடர்பிலான மேலதிக தகைமைகள் மற்றும் திறன்கள் என்பன துல்லியமாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அதேபோன்று ஏற்கனவே,

இவ்வாறு பாட வகுதி குறிப்பிடப்படாமல், பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு, அவர்களது கற்பித்தல் அனுபவம், பட்டத்தில் கற்ற பாடங்கள் மற்றும் அவர்களது விருப்பம் என்பனவற்றின் அடிப்படையில் அவர்களுக்கான பாட வகுதி குறிப்பிடப்பட்டு, நியமனக் கடிதம் வழங்கப்பட வேண்டும். மாணவர்கள் பெறும் பாடசாலைக் கல்வியில் ஆசிரியர்களின் வகிபாகம் தவிர்க்க முடியாதது. அதனால், ஆசிரியர்களின் தொழில் திருப்தி சிறப்பாக அமையும் போதே, அவர்களது செயலாற்றுகை விளைதிறனுள்ளதாக அமைவதுடன், மாணவர்களும் முழுமையான கல்வி வாய்ப்பைப் பெறுவர். எனவே, இவ்வாசிரியர்களது தொழில் திருப்திக்கான சாத்தியப்பாடுகள் இனங்காணப்பட்டு அவை துரிதமாகவும் முறையாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும், இப்பிரச்சினையை மாணவர்களின் கோணத்திலிருந்து ஆராய்தல், இதே போன்ற பிரச்சினைகள் வேறு பிரதேசங்களில் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கிய வகையில் கலப்பு ஆய்வு வடிவத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளல் என்பன பயனுள்ளவையாகும்.

**துணைநூற்பட்டியல்**

1. Ansar, A. L. M. (2016). *Is there a Solution for the Grievances of Eastern Province Graduated Teachers? (கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர்களின் அவலநிலைக்கு தீர்வு கிடைக்குமா?).* Battinews.com
2. Hattie, J. (2009). *Visible learning: A synthesis of over 800 meta-analyses relating to achievement.* London: Routledge.
3. Salem, Mohammad. (2011). *The Classroom Problems Faced Teachers at the Public Schools in Tafila Province, and Proposed Solutions*. Tafila, Jordan: Faculty of Education, Tafila Technical University.
4. Udoba, Alexander. (2014), *Challenges faced by teachers when teaching learners with developmental disability.* University of Oslo: Department of Special Needs Education, Faculty of Educational Sciences.
5. Mayaru. M. O. (2015). *The challenges facing the public primary school teachers in their teaching career in Tanzania.* Tanzania: Open University of Tanzania.
6. Cecilia, Boakye. (2017). *Challenges and solutions: The experiences of newly qualified science teachers.* Cape Coast, Ghana: Institute of Education, University of Cape Coast.
7. Ali, M. (2010). *Impact of emotions on employee's job performance*. Pakistan: COMSATS Institute of Information Technology Wah Cantt.
8. Linda, Evans. (2010). *New theoretical perspectives on job satisfaction and motivation: Challenging herzberg and linking with professional development*. University of Leeds, UK: School of Education.